| | |
|---|---|
| சிறிய வெங்காயம் | - 200 கிராம் |
| பச்சை மிளகாய் | - 50 கிராம் |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |
| உப்பு | - தேவையான அளவு |

**செய்முறை**

- இறாலை ஓடு மற்றும் குடல் நீக்கி நன்கு சுத்தம் செய்யவும். பின்னர் சிறிதளவு உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து 5 நிமிடங்களுக்கு வேக வைக்க வேண்டும்.
- கடலை பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பை சுத்தம் செய்து நீரில் ஊறவைக்கவும். நன்கு ஊறியபின் அறைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.
- வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை ஆகியவற்றை சிறிதாக நறுக்கி அரைத்து வைத்துள்ள மாவுடன் சேர்க்க வேண்டும்.
- உப்பு சேர்த்து மாவை நன்கு பிசைந்து தேவையான அளவில் உருண்டைகளாக்க வேண்டும்.
- மாவு உருண்டையை தட்டையாக்கும் போது நடுவில் இறால் துண்டுகள் ( 3 முதல் 5 வரை) வைத்து தட்ட வேண்டும்.
- எண்ணையில் பொன்னிறமாகும் வரை பொரிக்கவும்.

## நீண்ட காலப் பயிர்கள் நடும்பொழுது கவனிக்க வேண்டிய முக்கிய இடைவெளிகளின் அளவுகள்

| | |
|---|---|
| தென்னை மரம் | 24 அடி X 24 அடி |
| வாழை மரம் | 8 அடி X 8 அடி |
| பப்பாளி மரம் | 7 அடி X 7 அடி |
| மா மரம் | 30 அடி X 30 அடி |
| பலா மரம் | 22 அடி X 22 அடி |
| கொய்யா மரம் | 14 அடி X 14 அடி |
| மாதுளை மரம் | 9 அடி X 9 அடி |
| சப்போட்டா | 24 அடி X 24 அடி |
| அன்னா மீனா மரம் | 10 அடி X 10 அடி |
| தோடை மரம் | 15 அடி X 15 அடி |
| எலுமிச்சை மரம் | 14 அடி X 14 அடி |
| முந்திரி | 14 அடி X 14 அடி |
| நெல்லி மரம் | 14 அடி X 14 அடி |
| கறிவேப்பிலை மரம் | 7 அடி X 8 அடி |
| முருங்கை மரம் | 8 அடி X 8 அடி |
| கிராம்பு மரம் | 18 அடி X 18 அடி |
| கறுவா மரம் | 10 அடி X 10 அடி |
| தேக்கு மரம் | 10 அடி X 10 அடி |
| கோபி மரம் | 7 அடி X 7 அடி |
| கொக்கோ மரம் | 24 அடி X 24 அடி |
| வேப்பமரம் | 15 அடி X 15 அடி |
| பனை மரம் | 10 அடி X 10 அடி |
| மலைவேம்பு மரம் | 8 அடி X 8 அடி |
| பாக்கு மரம் | 7 அடி X 7 அடி |
| சந்தன மரம் | 15 அடி X 15 அடி |
| நாவல் மரம் | 30 அடி X 30 அடி |

இவ்வாறு இடைவெளி இருந்தால் அவற்றின் இலைகள் மற்றும் ஓலைகள் நன்கு பரப்பி வளர முடிகிறது.

இந்த இடைவெளிகளையும் விட குறைவாக இருந்தால் மரங்கள் காய்க்காமல் நீண்டு ஒல்லியாக வளர்ந்துகொண்டு போகும்.

இதன்பின் காய்த்தாலும் காய்கள் திரட்சி இல்லாமல் காய்கள் சிறிதாக இருக்கும்

மர தேவைக்காக வளர்க்கப்படும் மரங்கள் எனில் அம்மரங்கள் மெலிதாக நீண்டு வளரும்

இடைவெளிகள் அதிகமானால் மரங்கள் குறைந்த உயரத்தில் காய்க்க ஆரம்பிக்கும். அதோடு காய்கள் நன்கு பெருத்து திரட்சியாக காய்க்க ஆரம்பிக்கும். மரத்தின் சுற்றளவு நன்கு விருத்தியடையும்.

## நிலையத்தில் விற்பனைக்குரியவை

1. வேலிமசால் விதை -ரூ.520/கிலோ
2. தீவனச்சோளம் விதை (கோ.எப்.எஸ். 29) ரூ.400/-
3. கோ - 3, கோ - 4, கோ - 5, புல்கரணைகள் - ரூ.500/1000எண்ணிக்கை
4. பனீர் அழுத்தும் கருவி - ரூ.3250/-
5. அழகுச் செடிகள் - ரூ.20/-
6. குழித்தட்டு காய்கறி நாற்றுகள் - ரூ.100/-
7. மண்புழு உரம் - ரூ.10/கிலோ
8. பஞ்சகவ்யா - ரூ.100/லிட்டர்
9. சிப்பிக்காளான் - ரூ.200/கிலோ
10. கேவிகே சத்துமாவு ரூ. 200/ கிலோ
11. நேரடி நெல் விதைப்புக்கருவி ரூ.4800/-
12. விந்தை பெருச்சாளிப்பொறி -ரூ.600/-
13. களையெடுக்கும் கருவி ரூ.1300/-

14, மாடித்தோட்டத்திற்கான பைகள் மற்றும் உரங்கள் ரூ.90 - 130/-

14. தேனீ வளர்ப்பு பெட்டி ரூ.3300/-
15. அசோலா - ரூ.20/ கிலோ
16. மூலிகைச் செடிகள்
17. அலங்கார மீனினங்கள்
18. கோழிக்குஞ்சுகள்
19. இனக்கவர்ச்சிப் பொறிகள்


மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
வேளாண்மை அறிவியல் நிலையம்
காட்டுப்பாக்கம், காட்டாங்குளத்தூர் (அஞ்சல்)
காஞ்சிபுரம் மாவட்டம் – 603 203
தொலைபேசி : 044 – 2745 2371
மின்னஞ்சல் : kvk-kattupakkam@tanuvas.org.in
இணையதளம் : www.kvkkanchipuram.com


வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் – 603 203 நூல் அஞ்சல்

*பெறுநர்*
*திரு/திருமதி* ______________________
______________________
______________________
______________________

*அனுப்புநர்*
*பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம்*
*காட்டுப்பாக்கம், காட்டாங்குளத்தூர் (அஞ்சல்), காஞ்சிபுரம் மாவட்டம் -603 203*




# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம்
# வேளாண்மை அறிவியல் நிலையம், காஞ்சிபுரம்
# ICAR - KRISHI VIGYAN KENDRA, KANCHEEPURAM

# செய்தி மடல் NEWS LETTER

மலர்: 13 | ஏப்ரல் – ஜூன் 2020 | மடல்: 2



சிறப்பாசிரியர்
**முனைவர் நி.கு. சுதீப் குமார்**
விரிவாக்கக்கல்வி இயக்குநர்

ஆசிரியர்
**முனைவர் ப. இரா. நிஷா**
பேராசிரியர் மற்றும் தலைவர்

துணை ஆசிரியர்
**முனைவர் மா.விமலாராணி**
உதவிப் பேராசிரியர் (மனையியல்)

ஆசிரியர் குழு
**முனைவர் மா. சித்தார்த்**
**முனைவர் தி. செல்வராஜ்**
**முனைவர் க. தேவகி**
**முனைவர் காயத்ரி சுப்பையா**
**முனைவர் கி. சிவகுமார்**


## கறவைமாடு பண்ணையாளர்களுடன் இணையவழி கலந்துரையாடல்



ரிலையன்ஸ் அறக்கட்டளை சார்பில் 15.05.2020 அன்று கறவை மாடு பண்ணையாளர்களின் கூட்டம் இணையம் மூலம் நடத்தப்பட்டது. இதில் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப.இரா.நிஷா, மற்றும் முனைவர் க. தேவகி, உதவிப்பேராசிரியர் ஆகியோர் இணையம் வழி கலந்து கொண்டனர். இதில் காஞ்சிபுரம் மாவட்டத்தை சார்ந்த 25 கறவைமாடு பண்ணையாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இக்குழு கூட்டத்தில் இணைய வழி கறவைமாடு பண்ணையாளர்களின் சந்தேகங்களுக்கு உரிய பதில்கள் அளிக்கப்பட்டத. இதில் இந்நிலைய பேராசிரியர் அவர்கள் கறவை மாடுகளை கோடை காலத்தில் பராமரிப்பது குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும், இந்நிலைய உதவிப் பேராசிரியர், அவர்கள் கால்நடைகளுக்கு கோடை காலத்தில் வரக்கூடிய நோய்கள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள், மற்றும் மரபுசார் மூலிகை மருத்துவம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் கறவைமாடு பண்ணையாளர்கள் பல்வேறு கேள்விகள் எழுப்பினர். அதற்குரிய பதில்கள் இந்நிலைய கால்நடை வல்லுநர்கள் மூலம் அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி காலை 11 மணி முதல் பகல் 1.30 மணி வரை இணையம் வழி நடத்தப்பட்டது. இதனை ரிலையன்ஸ் அறக்கட்டளை மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் இணைந்து நடத்தியது. இந்நிகழ்ச்சியில் கைபேசி மற்றும் இணையவழி மூலமாக காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 25 கறவைமாடு பண்ணையாளர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## கோழிப்பண்ணை பார்வையிடல்





வேளாண்மை அறிவியல் நிலையம் காட்டுப்பாக்கம் மூலம் பத்து ஆதி திராவிடர் பயனாளிகள் சோகண்டி கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு கோழிக்கூண்டுகள் மற்றும் கோழிக்குஞ்சுகள் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு பயனாளிக்கும் ஒரு கோழிக்கூண்டு மற்றும் 20 கோழிக் குஞ்சுகள் வேளாண்மை அறிவியல் நிலையம் காட்டுப்பாக்கம் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப.இரா.நிஷா அவர்கள் மூலம் வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சோகண்டி கிராமத்திற்கு பயனாளிகளின் கோழிப்பண்ணையினை 15.06.2020 அன்று பார்வையிடப்பட்டது. பயனாளிகள் கோழிகளை நன்கு பராமரித்து வருகின்றனர். இத்திட்டத்தின் மூலம் சோகண்டி கிராமத்தின் 10 பயனாளிகள் பயனடைந்தனர். மேலும் இப்பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் பராமரிப்பு, குறைந்த செலவில் தீவனம் உற்பத்தி செய்து அளித்தல், நோய் பராமரிப்பு முறைகள் மற்றும் பண்ணைசுகாதாரம் குறித்து முனைவர் க.தேவகி, உதவிப்பேராசிரியர் மற்றும் முனைவர் ப.இரா.நிஷா, பேராசிரியர் மற்றும் தலைவர் வேளாண்மை அறிவியல் நிலையம், மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இந்நிலையம் மூலம் 10 பயனாளிகளின் வருவாய் அதிகரித்து தொழில் முனைவோராக உருவாக்கப்பட்டுள்ளனர்.

## இயற்கை உரம் உற்பத்தி



வேளாண்மை அறிவியல் நிலையம் காட்டுப்பாக்கத்தில் கடந்த 03.06.2020 அன்று பாரம்பரிய இயற்கை வேளாண்மை திட்டத்தின் பங்களிப்புடன், பயிர்கழிவுகளை நுண்ணுயிரி நிறமிகளைப் பயன்படுத்தி எவ்வாறு மட்க வைப்பது என்ற செயல் விளக்கமும், இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு பற்றிய பயிற்சியும் 20 விவசாயிகளுக்கு நெற்குன்றம் கிராமத்தில் அளிக்கப்பட்டது. மேலும் இந்த திட்டத்தின் முக்கிய பணியாக மண்ணில், விஷத் தன்மையுடைய ரசாயனம் கலக்கப்பட்டுள்ளதா என்று கண்டறிய மாதிரிகள் விவசாயிகளின் வயலில் இருந்து சேகரிக்கப்பட்டது.

## தத்தெடுக்கப்பட்ட கிராமத்தில் கொரானா (கோவிட் 19) நிவாரணப்பணிகள்



காட்டுப்பாக்கம், வேளாண்மை அறிவியல் நிலையம் மூலமாக 30.05.2020 அன்று தத்தெடுக்கப்பட்ட கிராமமான தத்தளூரில் கொரானா நிவாரணப் பணிகள் நடைபெற்றன. இதில் ரூ.15,500/- மதிப்பிலான மளிகைப் பொருட்கள் மற்றும் காய்கறிப் பொருட்கள் 25 நபர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் 100 நபர்களுக்கு முகக்கவசம் வழங்கப்பட்டது. குறிப்பாக ஊரடங்கு காலத்தில் கூலி வேலை இல்லாதவர்கள், முதியவர்கள், சுகாதாரப் பணியாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆகியோருக்கு நிவாரணப் பொருட்கள் அளிக்கப்பட்டது. அதே தினத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைப்பெற்றது. அதில் ஆரோக்கியம், சுகாதாரம், முகக்கவசம், அணிதல், சமூக இடைவெளியில் விவசாயப் பணிகளை மேற்கொள்ளுதல் போன்றவை எடுத்துரைக்கப்பட்டத. முனைவர் ப.இரா.நிஷா, பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க.சிவக்குமார், உதவிப்பேராசிரியர், ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்ச்சியை நடத்தினர். முனைவர் மா.விமலாராணி, இணைப்பேராசிரியை இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைத்து நடத்தினார்.

## முதல்நிலை செயல்விளக்க திட்டம் - மதிப்பூட்டப்பட்ட தர்பூசணிப் பொருட்கள்



வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் தத்தெடுக்கப்பட்ட கிராமமான தத்தளூரில் மதிப்பூட்டப்பட்ட தர்பூசணி பொருட்கள் - பழச்சாறு, உள் பட்டையிலிருந்து ஊறுகாய், மிட்டாய், ஜாம், போன்றவை செயல்விளக்கம் காட்டப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 10 விவசாய மகளிர்க்கு பயிற்சி அளிக்கப்பட்டு இடுபொருட்களாக பையப்படுத்தும் பொருட்கள், பையகப்படுத்தும் கருவி செயல்முறை விளக்கப் பொருட்கள் போன்றவை வழங்கப்பட்டது. பயிற்சியில் தொழில் துவங்குவதற்கான வழிமுறைகள், விற்பனை வாய்ப்பு, உணவுத்தரச்சான்றிதழ் வாங்கும் வழிமுறைகள் கற்றுத்தரப்பட்டது. பயிற்சி பெற்ற விவசாய மகளிர் தர்பூசணிப் பொருட்களான ஊறுகாய், மிட்டாய் போன்றவற்றை சிறிய அளவில் தயாரித்து விற்பனை செய்கின்றனர்.

## முதல்நிலை செயல்விளக்க திட்டம் - மக்காச்சோள விதை நீக்கும் கருவி



காஞ்சிபுரம் மாவட்டம், வையாவூர் கிராமத்திற்கு மக்காச்சோள விதை நீக்கும் கருவி செயல் விளக்கத்தை வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப.இரா.நிஷா முன்னிலையில் பேராசிரியர் முனைவர் மா.சித்தார்த் நடத்தினார். அப்பொழுது மக்காச்சோள விதை நீக்கும் கருவி கொண்டு மணிக்கு சுமார் 100 கிலோ விதை வீதம் நீக்கப்பட்டது. ஆள் பற்றாக்குறை மிகுந்த தற்போதைய சூழ்நிலையில் கருவியைக் கொண்டு விதை நீக்கும்போது குறைந்த நேரத்தில் அதிகப்படியான விதையை நீக்க முடியும். இக்கருவி ளவைபேடந யீாயளந மின் மோட்டாரால் இயக்கப்பட்டது. இதை இயக்க ஒரே ஒரு ஆள் போதுமானது. உதவிக்கு மேலும் ஒரு ஆள் இருந்தால் நல்லது. இக்கருவி மூலம் ஒரு நாளைக்கு சுமார் 800 கிலோ விதை பிரித்தெடுக்க இயலும். மாட்டுத் தீவனத்திற்காகப் பயன்படக் கூடிய மக்காச்சோளத்திற்கு இக்கருவி மிகவும் ஏற்றதாகும்.





## பண்ணை ஆய்வுத் திட்டம் - குறைந்த அளவுள்ள உப்பு நீரில் ஜெயந்தி ரோகு



காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஏரிகள், குளங்கள் மற்றும் பண்ணை குட்டைகளில் விவசாயிகள் மீன் வளர்ப்பு மேற்கொள்கின்றனர். இம்மாவட்டத்தில் சில பகுதிகளின் நீர் நிலைகள் குறைந்த உப்புத்தன்மை கொண்டது. உப்பு நீரில் வளரும் மீன் குஞ்சுகள் விவசாயிகளுக்கு தேவையான அளவில் எளிதில் கிடைப்பதில்லை. அதனால் இந்நிலையத்தின் மூலமாக குறைந்த அளவுள்ள உப்பு நீரில் ஜெயந்தி ரோகு மீன் வளர்ப்பு விவசாயிகளின் பண்ணைக்குட்டைகளில் ஆய்வு செய்யப்பட்டது. இதில் 30 செண்ட பரப்பளவு கொண்ட பண்ணை குட்டைகளில் 1200 ஜெயந்தி ரோகு மீன் குஞ்சுகள் விடப்பட்டன இந்த ஆய்வில் கூடுதல் தீவனமாக கடலை புண்ணாக்கு மற்றும் அரிசி தவிடு கலவை மொத்தமாக 840 கிலோ வழங்கப்பட்டது. ஆறு மாதத்தில் சராசரியாக 86,3 சதவீதம் மீன்கள் உயிருடன் எஞ்சியிருந்தன. ஒரு பண்ணைக் குட்டையிலிருந்து 517,8 கிலோ மீன்கள் அறுவடை செய்து விற்கப்பட்டது. மற்ற மீன்களை ஒப்புடும் போது ஜெயந்தி ரோகு மீன் வளர்ப்பதன் மூலம் 30 செண்ட் பண்ணைக்குட்டைலிருந்து ரூபாய் 24756 இலாபமாகக் பெறப்பட்டது. இத்தொழில்நுட்பம் புவனேஸ்வரிலுள்ள மத்திய நன்னீர் ஆராய்ச்சி நிலையம் மூலம் 2017இல் பரிந்துரைக்கப்பட்டது.

## பண்ணை ஆய்வுத் திட்டம் - பசுந்தாள் உரப்ப யிர்களின் இரகங்களை மதிப்பீடு செய்தல்



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் வேளாண்மை அறிவியல் நிலையத்தால் உரப்பயிர்களின் இரகங்களை மதிப்பீடு செய்தல் என்ற பண்ணை ஆய்வுத் திட்டம் மதுராந்தகம் தாலுக்கா சித்தாளப்பாக்கம் கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு நிறைவு பெற்றுள்ளது. காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள மண்வகைகளில் அங்ககச் சத்து 0.5 சதவிகிதத்தின் கீழ் காணப்படுகின்றது. இந்த திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட ஆய்வில் மண்ணின் கார்பன், தழைச்சத்து விகிதாச்சாரம் 1 25 என்ற அளவில் மேம்பாடு அடைந்துள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த திட்டம் செயல்படுத்தப்பட்ட வயலில் நெல் மகசூல் 88 அளவில் மேம்பாடு அடைந்துள்ளது. பல்வகை உரப்பயிர்களை வயலில் சாகுபடி செய்து இயற்கை உரமாக அளிப்பதன் மூலம் 500 கிலோவிலிருந்து 1000 கிலோ வரை நெற்பயிரில் அதிக மகசூல் பெறலாம்.

## நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தும் முறைகள்



நூற்புழுக்கள் பெரும்பாலும் எல்லா பயிர்களையும் தாக்கும். தற்பொழுது காய்கறிகள் மற்றும் பழத்தோட்டத்தில் பாதிப்பு அதிகமாக உள்ளது. நூற்புழுக்கள் தாக்கிய பயிர்களில் வேர் முடிச்சுகள் காணப்படும். தாக்குதலுக்கு உள்ளான பயிர்களில் வளர்ச்சி குறைந்து காணப்படும். இலைகள் பச்சையம் இழந்து பழுப்பு நிறமாகத் மாறிவிடும். மேலும் பயிர்க்கு நோய் உண்டாகும். இப்பாதிப்புகளினால் தண்ணீர் மற்றும் சத்துக்கள் மண்ணிலிருந்து சரியாக பயிர்களுக்குச் செல்லாது. இதனால் நாளடைவில் மகசூல் குறைந்து விடும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- கோடை உழவு செய்ய வேண்டும்.
- பயிர் சுழற்சி முறையை கையாள வேண்டும். தொடர்ந்து ஒரே பயிரை பயிரிட கூடாது
- ஒரு ஏக்கருக்கு தேவையான 2 கிலோ பேசிலோமைசிஸ் மற்றும் 2 கிலோ டிரைக்கோடர்மா விரிடி அல்லது டிரைக்கோடர்மா ஆர்சியானம் மற்றும் 1 டன் தொழுவுரம் அல்லது மண்புழு உரம் கலந்து மண்ணில் இட்ட பின் விதைப்பு/நடவு செய்ய வேண்டும்.
- ஒரு ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இடுவதால் நூற்புழுக்களின் பெருக்கம் மற்றும் தாக்குதலை ஓரளவு குறைக்கலாம்.
- செண்டு மல்லி/ சாமந்தி பூவை ஓரங்களில் பயிரிட்டால் நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.
- சணப்பை பயிர் செய்து 45 நாட்களில் மடக்கி உழுவதன் மூலம், நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

இதனால் பயிர்களில் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கலாம்.

## இறால் வடை



| தேவையான பொருட்கள் | அளவு |
|---|---|
| தோலுரித்த இறால் | - 250 கிராம் |
| கடலை பருப்பு | - 500 கிராம் |
| உளுத்தம் பருப்பு | - 10 கிராம் |